DECEMBER 2023 **U/ID 30617/UCL1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

I. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. பாரதியார் தோழனாகக் கண்ணனை எவ்வாறு பாவித்துள்ளார்?

2. ஞாயிற்றின் காட்சிகளை எவ்வாறு பாவேந்தர் உவமைப் படுத்திப் பாடியுள்ளார்.

3. பாரதிதாசனின் மொழிப்பற்று குறித்து எழுதுக.

4. ரா.பி. சேதுப்பிள்ளை தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் பழைய உறவு பற்றி கூறியவற்றை எழுதுக.

5. பரணர் பேகனின் மனைவி கண்ணிகியின் துன்பம் பற்றி பாடியுள்ளவற்றை எடுத்துரைக்க.

6. இன்குலாபின் ஒளவை நாடகத்தில் ஒளவையின் நட்பு எத்தகையது?

7. இன்குலாபின் ஒளவை நாடகத்தின் நோக்கம் பற்றி எழுதுக.

8. பூமணியின் பிறகு புதினத்தில் ஏதேனும் நான்கு பாத்திரங்களைச் சுட்டுக.

9. பிறகு புதினத்தில் கருப்பன் பத்திரம் பற்றி எழுதுக.

10. பால் வண்ணம் பிள்ளை சிறுகதையின் முதன்மைப் பாத்திரத்தின் தன்மையைச் சுட்டுக.

11. ஆற்றங்கரைப் பிள்ளையார் சிறுகதையின் கதைக்களம் யாது?

12. ஒரு நாள் கழிந்தது சிறுகதையின் கதைக்கரு யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

II. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. பாரதியார் கண்ணன்பாட்டில் தென்றலின் தன்மையை எவ்வாறு வருணித்துள்ளார்? – விளக்குக.

14. பாரதியாரின் கண்ணன் பாட்டில் அகமரபுகளின் கருத்துக்களைத் தந்துரைக்க.

15. சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பற்றி விவரிக்க.

16. ரா.பி. சேதுப்பிள்ளை இயற்கை இன்பம் பற்றி கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

17. ஔவை நாடகத்தின் ஔவையாரின் சிறப்புக்கள் யாவை? விளக்குக.

18. பூமணி நாவிளல் "துரைசாமிபுரம்" மக்களின் வாழ்வில் பற்றி எழுதுக.

19. புதுமைப்பித்தனின் "மனித யந்திரம்" சிறுகதையைச் சுருக்கமாக எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

III. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. கண்ணன் பாட்டின் வழி பாரதியார் சொல்ல விழைந்த கருத்துகளைத் தொகுத்துரைக்க.

21. பாவேந்தர் கடல், தென்றல், குன்றம், ஆகியவற்றின் காட்சிகளை எவ்வாறு வருணித்துள்ளார்? விவரிக்க.

22. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் வஞ்சினம் எத்தகையது – விவரிக்க.

23. இன்குலாப்பின் ஔவை நாடகத்தின் அமைப்பும் அதன் சிறப்புகள் பற்றி விவரிக்க.

24. புதுமைப்பித்தன் சிறுகதையில் மனித யந்திரம் மூலம் சமுதாயத்திற்குக் கூறியவற்றைத் தொகுத்துரைக்க.

———————